இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 24-08-2025

# ரம்மியை ஆதரித்த ரவி எங்கே போனார்?

இணையவழி பண விளையாட்டுகளுக்குத் தடை விதிக்கும் மசோதாவை ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்களவையில் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறது. 'இணையவழி விளையாட்டு மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை சட்ட மசோதா - 2025' என்று இதற்குப் பெயர். பணம் வைத்து விளையாடும் ரம்மி, சூதாட்டம், போக்கர், லாட்டரி, பந்தயம் ஆகியவற்றை இந்தச் சட்டம் தடை செய்கிறது.

**இந்தச் செய்தியைப் படிக்கும் போது, 'இதையெல்லாம் தமிழ்நாட்டு ஆளுநர் ரவி எப்படி தாங்கிக் கொள்கிறார்?' என்ற கவலைதான் நமக்கு ஏற்பட்டது. ஏனென்றால், தமிழ்நாட்டில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்ட போது, அதற்கு அனுமதி தராமல் வைத்திருந்தவர்தான் இந்த ஆளுநர். ஆன்லைன் ரம்மியை ஆதரிப்பதுபோல அன்று நடந்து கொண்ட ஆளுநர் ரவி, இன்று மவுனமாக இருப்பது ஏன்? ஒன்றிய அரசுக்கு எதிராக குரல் கொடுத்திருக்க வேண்டாமா?**

'நான் நிறுத்தி வைத்தாலே, மறுக்கப்பட்டதாகத் தான் அர்த்தம்' என்று நீட் தேர்வு விலக்கு மசோதாவுக்கு மட்டுமல்ல; ஆன்லைன் ரம்மி தடை மசோதாவுக்கும்தான் சேர்த்துச் சொன்னார் ஆளுநர் ரவி. இப்போது மக்களவையில் அதே போன்றதொரு மசோதா, இந்தியா முழுமைக்கும் வந்து விட்டதே; ஆளுநர் ரவி பொங்கி எழுந்திருக்க வேண்டாமா?

இணையவழிச் சூதாட்டத்தைத் தடை செய்வதுகுறித்து ஆராய நீதியரசர் சந்துரு தலைமையிலான ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்தது. நீதியரசர் சந்துரு குழுவானது 27.06.2022 அன்று தனது அறிக்கையினை அரசிடம் வழங்கியது. அந்த அறிக்கை அதே நாளில் அமைச்சரவைக் குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்து, பள்ளி செல்லும் மாணவர்களுக்கிடையே இணையவழி விளையாட்டு எந்த விதப் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதைப் புரிந்து கொள்வதற்காக, பள்ளிக்கல்வித் துறை ஜூலை 2022-ல் ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. இந்தக் கணக்கெடுப்பில் தமிழ்நாட்டில் உள்ள 2,04,114 அரசுப்பள்ளி ஆசிரியர்களிடம் கருத்துக் கோரப்பட்டது. மாணவர்களின் ஒருமுகப்படுத்தும் திறனில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக 74 விழுக்காடு ஆசிரியர்கள் சொன்னார்கள்.

இணையதள விளையாட்டைத் தடுப்பது தொடர்பாக அரசால் இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் குறித்து பொதுமக்களிடம் 7.8.2022 அன்று கருத்துகள் கேட்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்து 10,735 மின்னஞ்சல்கள் பெறப்பட்டன. அதில், 10,708 மின்னஞ்சல்களில் இணையதள விளையாட்டையும், இணையதள ரம்மி விளையாட்டையும் தடை செய்வதற்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கப்பட்டது. 27 மின்னஞ்சல்களில் மட்டுமே தடை செய்வதற்கு எதிராக கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

**11.08.2022 மற்றும் 12.08.2022 ஆகிய நாட்களில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தி, கருத்துகள் பெறப்பட்டன. இவை அனைத்தையும் அடிப்படையாக வைத்துத்தான் ஒரு வரைவுச் சட்டம் தயாரிக்கப்பட்டு 26.09.2022 அன்று அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டது.**

**இதன்பிறகுதான், தமிழ்நாடு இணையவழிச் சூதாட்டத்தை தடைசெய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் அவசரச் சட்டம் 2022-ஐ மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அக்டோபர் 1, 2022 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இது தமிழ்நாடு அரசின் அரசிதழில் அக்டோபர் 3, 2022-ல் வெளியிடப்பட்டது.**

அதன்பிறகு, மேற்கண்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டது. இந்தச் சட்டமானது கடந்த 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக சட்டத்துறையால் அனுப்பப்பட்டது. இதற்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் தரவில்லை.

பல்வேறு கேள்விகளை எழுப்பி, விளக்கங்கள் கேட்டு தமிழ்நாடு அரசுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி. 2022 நவம்பர் 24-ஆம் தேதி கடிதம் எழுதினார். "நீங்கள் உருவாக்கி இருக்கும் மசோதா அரசியலமைப்புச் சட்டக் கூறு 19 (1) (g)-க்கு எதிரானதாகும்" என்று ஆளுநர் சொன்னார். "குறிப்பிடத்தக்க அளவு தடை (Proportional ban) மட்டுமே அனுமதிக்க முடியும் என்று சென்னை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டதை மீறி இந்தத் தடை அமைந்துள்ளது" என்றும் குற்றம் கண்டுபிடித்தார் ஆளுநர். இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்ற, அடுத்த 24 மணி நேரத்திற்குள் தமிழ்நாடு அரசு விளக்கக் கடிதத்தை அனுப்பி வைத்தது. ஆளுநரை நேரில் சந்தித்து விளக்கம் அளிக்க அனுமதி கேட்டும், நேரம் ஒதுக்கப்படவில்லை.

ஆளுநர் ஆர்.என்.ரவியை ஆன்லைன் விளையாட்டுக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் சந்தித்ததாகக் கூறப்பட்டது. சந்தித்ததாக செய்தி வெளியானதை ஆளுநர் மாளிகை மறுக்கவில்லை.

2022 அக்டோபர் 19ஆம் நாள் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்டத்தை 2023 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி ஆளுநர் திருப்பி அனுப்பினார். 139 நாட்கள் கழித்து திருப்பி அனுப்பினார் ஆளுநர். 2023 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்பிறகும் அப்படியே கிடப்பில் போட்டு வைத்தார் ஆளுநர் ரவி.

உடனடியாக சட்டமன்றத்தில் இதனைக் கண்டித்துப் பேசினார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின். 'இதுபோன்ற சட்டங்களுக்கு கையெழுத்துப்போட காலநிர்ணயம் வேண்டும்' என்றார். முதலமைச்சர் உரையாற்றிய இரண்டு மணிநேரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டார் ஆளுநர். உடனடியாக அன்றைய தினமே அரசிதழிலும் வெளியிட்டு விட்டார் முதலமைச்சர்.

**தமிழ்நாடு அரசு அப்போதே நிறைவேற்றிவிட்ட மசோதாவைத் தான் பா.ஜ.க. அரசு இப்போது கொண்டு வந்துள்ளது.**

**ஆன்லைன் சூதாட்டத் தடை போட்டு, ஆளுநர் அனுமதி தராமல் இழுத்தடித்த கால இடைவெளியில் தமிழ்நாட்டில் 47 உயிர்கள் பறி போயின. இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது ஆளுநர் ரவிதானே? ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்துக்கு அனுமதி தராமல் ஆளுநர் ரவி இருந்தது இன்றுவரை மர்மமாகவே இருக்கிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) தலைமைச் செயலகத்தில், ஈரோடு அனைத்து ஜவுளிப் பதனிடுவோர் சங்கத் தலைவர் ஏ.முருகேசன், செயலாளர் என்.பழனிச்சாமி, திருப்பூர் சாயச்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பி.காந்திராஜன், பொருளாளர் பி.ஏ.மாதேஸ்வரன், செயலாளர் முருகசாமி, நாமக்கல் சாயமிடுவோர் சங்க செயலாளர் வி.கிருஷ்ணராஜ், சேலம் அர்த்தநாரி கிளாத்திங் பிரைவேட் லிட் மேலாண்மை இயக்குநர் டி.சசிகுமார், நூல் சாயமிடும் பூங்கா மேலாண்மை இயக்குநர் கே.எம்.தர்மலிங்கம், தேனி எல்.எஸ் மில்ஸ் முதன்மை நிருவாக அலுவலர் பி.ஞானகுருசாமி, தென்மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமத்தின் தலைவர் எம்.இளங்கோ, பழனியப்பன் ஆகியோர் சந்தித்து, ஜவுளி பதனிடுதல் பிரிவிற்கான மூலதன மானியம் 268 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வி. அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் திருமதி ஆர். லலிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வாக்குத் திருட்டு போல திருக்குறளை வைத்து தமிழர் ஓட்டுகளை எல்லாம் திருட முடியாது!

# அமித்ஷாவின் மிரட்டல் உருட்டல்களுக்கு எல்லாம் அஞ்சி நடுங்க இது பழனிசாமி ஆட்சி அல்ல!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. காட்டமான அறிக்கை!

**சென்னை, ஆக. 24–**
**'வாக்குத் திருட்டு போல திருக்குறளை வைத்து தமிழர் ஓட்டுகளை எல்லாம் திருட முடியாது' என்றும் 'எங்களுக்கான முதலமைச்சர் அறிவாலயத்தில் இருந்து வருவார். அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணிக்கு நாக்பூரில் இருந்துதான் வருவார்கள்' என்றும் 'மோடியின் அமைச்சரவையில் 39 சதவிகிதம் பேர் குற்றப் பின்னணி கொண்டவர்கள். இவர்கள் மீதெல்லாம் 130–ஆவது சட்டப் பிரிவு பாயுமா?' என்றும் 'அமித்ஷாவின் மிரட்டல் உருட்டல்களுக்கு எல்லாம் அஞ்சி நடுங்க இது தொடை நடுங்கி பழனிசாமி ஆட்சி அல்ல' என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து ஆ.இராசா எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருநெல்வேலி பாஜக பூத் கமிட்டி மாநாட்டில் பங்கேற்க வந்த ஒன்றிய உள் துறை அமித்ஷா, டெல்லியில் இருந்து எதையும் கொண்டு வரவில்லை. வழக்கம் போலவே அரைத்த மாவையே அரைத்திருக்கிறார். திராவிட மாடல் அரசைக் குறை கூறுவதற்கு எதுவும் கிடைக்காமல், ஏற்கனவே கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன பொய்களைப் பேசிச் சென்றிருக்கிறார்.

"திருக்குறளின் வழி நின்று ஆட்சி நடத்தி வருகிறார் மோடி" எனச் சொல்லியிருக்கிறார். திருவள்ளுவர் உயிரோடு இருந்திருந்தால் குறள் பாடியே ஒன்றிய அரசைச் சாடியிருப்பார். பொய்களை மட்டுமே கொண்டு ஆட்சியை நடத்தி கொண்டிருக்கும் ஒன்றிய அரசு திருவள்ளுவர் எழுதிய பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்றுஎன்ற குறளைப் படிக்க வேண்டும். பொய் சொல்லாமல் ஒருவன் வாழ்ந்தால் பிற அறங்களைச் செய்யாமல் இருப்பதுகூட, அவனுக்கு நல்லதாகிவிடும் என்கிறார் திருவள்ளுவர். இந்தக் குறளை அமித்ஷா படித்தால் போதும் பொது வெளியில் பொய் வடைகளை சுடுவதை நிறுத்தி விடுவார்.

**பிடுங்கி எறியப்பட வேண்டிய நச்சுச் செடி!**

வாக்கு திருட்டு போல திருக்குறளை வைத்து தமிழர் ஓட்டுகளை எல்லாம் திருட முடியாது.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

என்ற குறளில், ஆட்சிக்கோல் ஏந்தியிருப்பவர்கள் தமது குடிமக்களிடம் அதிகாரத்தைக் காட்டிப் பொருளைப் பறிப்பது, வேல் ஏந்திய கொள்ளைக்காரனின் மிரட்டலைப் போன்றது என்கிறார் திருவள்ளுவர். அளவுக்கு அதிகமாக வரி வசூலிக்கும் அரசரை வழிப்பறிக் கொள்ளையனுடன் ஒப்பிடுகிறார். ஜி.எஸ்.டி என்ற கொடிய வரியை வசூலித்து மக்களை வஞ்சிக்கும் அமித்ஷா எல்லாம் திருக்குறளையும் திருவள்ளு வரையும் பேசத் தகுதியே இல்லை.

சோனியா காந்திக்கு ஒரே லட்சியம், ராகுல் காந்தியை பிரதமராக்குவதே கனவு; அதேபோல திமுக-விற்கு உதயநிதியை முதல்வராக்குவதே கனவு. இந்த இரண்டுமே நடக்காது" எனச் சொல்லியிருக்கிறார் அமித்ஷா.

அமித்ஷாவின் மகன் ஜெய்ஷா எப்படி இந்திய கிரிக்கெட் வாரியத்திற்குச் செயலாளர் ஆனார்? அவருடைய கிரிக்கெட் அறிவு என்ன? அவரை ஓட்டு போட்டா தேர்ந்தெடுத்தார்கள்? மக்கள் வாக்களித்தால் யாரும் முதல்வர் ஆகலாம். தமிழ்நாட்டில் யார்? முதல்வர் ஆக வேண்டும் என்பதை இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்தவரான அமித்ஷா முடிவு செய்ய முடியாது. முத்தமிழறிஞர் கலைஞருக்கு இப்படித்தான் சொன்னார்கள். அவருடைய மகன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் சொன்னார்கள். ஆனால், வரலாறு நடத்திக் காட்டியது. துணை முதல்வர் உதயநிதி அவர்களைப் பார்த்து அமித்ஷாவுக்கு பயம் வந்து விட்டது போல. 2026 சட்டமன்றத் தேர்தலில் பாஜக - அதிமுக கூட்டணிக்கு அவர் சமாதி கட்டுவார். எங்களுக்கான முதலமைச்சர் அறிவாலயத்தில் இருந்து வருவார். அதிமுக - பாஜக கூட்டணிக்கு நாக்பூரில் இருந்துதான் வருவார்கள்.



வரப்போகும் தேர்தலில் திமுக-வை வேரோடு பிடுங்கி எறிந்து, என்.டி.ஏ.-வின் வெற்றியை அறிவிக்க வேண்டும்" எனப் பேசியிருக்கிறார் அமித்ஷா. இந்தியாவில் இருந்தே வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டிய நச்சு செடி பாசிச பாஜக. இந்தியா கூட்டணியும் மக்களும் அதனை நிகழ்த்திக் காட்டுவார்கள்.

130-வது சட்டத்திருத்தத்தை 'கறுப்பு சட்டம்' என்கிறார் ஸ்டாலின்; அதைச் சொல்ல அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை'' என்கிறார் அமித்ஷா. சொராபுதீன் என்கவுன்டர் வழக்கில் சிறையிருந்த நீங்கள் எல்லாம் இந்தச் சட்டத்தை இயற்ற தகுதியில்லாதவர். மோடியின் அமைச்சரவையில் 28 அமைச்சர்கள் மீது வழக்குகள் இருக்கிறது. இதில் 19 அமைச்சர்கள் மீது மிகவும் கடுமையான குற்ற வழக்குகள் உள்ளன. மோடியின் அமைச்சரவையில் 39 சதவிகிதம் பேர் குற்றப் பின்னணி கொண்டவர்கள். இவர்கள் மீதெல்லாம் 130-வது சட்டப் பிரிவு பாயுமா? தங்களுக்குப் பிடிக்காதவர்களை ஆட்சியிலிருந்து விரட்டக் கொண்டு வந்த சட்டத்தை 'கறுப்பு சட்டம்' என்று சொல்லாமல் வேறு எப்படி அழைப்பார்களாம். இது நல்ல சட்டம் என்றால், ஏன் பாஜகவுக்கு மட்டும் பொருந்துவதில்லை.

130வது சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டால் தனது ஏவல்துறையான அமலாக்கத்துறையை பயன்படுத்தி எப்படியெல்லாம் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஒன்றிய பாஜக அரசு குழப்பங்களை ஏற்படுத்தும் என்று நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

தனது அரசியல் எதிரிகளை மிரட்டி தன்னால் ஆளமுடியாத மாநில அரசுகளை முடக்குவதற் காக 130 ஆவது அரசியல் சட்டத்திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்திருக்கிறது பாஜக. ஏற்கெனவே அமலாக்கத்துறை, சிபிஐ, தேர்தல் ஆணையம் போன்ற அதிகார அமைப்புகளை அரசியல் எதிரிகளை பழிவாங்கப் பயன்படுத்திவரும் பாஜக, இப்போது தான் ஆள முடியாத மாநிலங்களின் முதல்வர்கள் அமைச்சர்களைக் கைது செய்து அவர்களது பதவியைப் பறிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

**தமிழ்நாடு முதலமைச்சர் எழுப்பிய கண்டனக் குரல்!**

இந்தச் சர்வாதிகாரக் கருப்புச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து தமிழ்நாடு முதலமைச்சர் எழுப்பிய கண்டனக் குரல் அமித்ஷாவை ஆட்டங்காணச் செய்திருக்கிறது, அதனால்தான் உடனே தமிழ்நாட்டிற்கு ஓடி வந்து தனது புளுகு மூட்டைகளை அவிழ்த்து விட்டுச் சென்றிருக்கிறார். நாட்டைச் சர்வாதிகார நாடாக மாற்றத் துடிக்கும் பாஜகவின் பாசிசத் திட்டத்திற்கு எதிரான சிம்ம சொப்பனமாக தமிழ்நாடு முதலமைச்சர் இருக்கிறார் என்பதைத்தான் அமித்ஷாவின் அபத்த உளரல்கள் நிரூபித்திருக்கிறது. அமித்ஷாவின் மிரட்டல் உருட்டல்களுக்கு எல்லாம் அஞ்சி நடுங்க இது தொடைநடுங்கி பழனிசாமி ஆட்சி அல்ல, தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தைக் காத்து நிற்கும் முதலமைச்சரின் அரசு,

நாட்டின் மிகப்பெரிய ஊழல் கட்சி திமுக" என தேய்ந்த ரிக்கார்டு போலச் சொல்லியிருக்கிறார் அமித்ஷா. அமித்ஷாவுக்கு நாக்கு ஒன்றுதான். வார்த்தைகள்தான் வேறு வேறு.

2018 ஜூலை 9-ம் தேதி சென்னையில் பேசிய அமித்ஷா, "நாட்டிலேயே ஊழல் அதிகமாக உள்ள மாநிலமாகத் தமிழகம் உள்ளது'' என்று அன்றைக்கு இருந்த எடப்பாடி பழனிசாமி ஆட்சியைச் சொன்னார்.

2016 ஏப்ரல் 14-ம் தேதி திருச்சியில் பேசிய அமித்ஷா, "நாட்டிலேயே ஊழல் மிகுந்தது ஜெயலலிதா ஆட்சிதான்" என்றார்.

ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆட்சிகளை ஊழல் ஆட்சியென்று சொல்லிவிட்டு அதிமுகவோடு கூட்டணி போடுவது எல்லாம் அமித்ஷாவின் சாணக்கியத்தனத்தில் அடங்குமா? ஊழலிலேயே திளைத்து ஊழலிலேயே தவழ்ந்து உலக மகா ஊழல் ஆட்சி நடத்திய அதிமுகவுடன் வெட்கமே இல்லாமல் ஊழல் கூட்டணி வைத்திருக்கும் அமித்ஷா, தமிழ்நாட்டில் ஊழல் ஆட்சி நடக்கிறது என்று பேசுவதைக் கேட்டால் சின்னக் குழந்தையும் கைகொட்டிச் சிரிக்கும்.

**தமிழ்நாடு இன்று பொருளாதாரத்தில் முதலிடம்!**


தேர்தல் பத்திர ஊழல், சிஏஜி சுட்டிக்காட்டிய 7.5 கோடி ஊழல், ரஃபேல் விமான முறைகேடு ஊழல்... என ஒன்றிய பாஜக அரசு மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் அணி வகுக்கின்றன. புலனாய்வு அமைப்புகளை வளைத்துவிட்டதால் பாஜக ஆட்சியாளர்கள் விசாரணை வளையத்தில் சிக்காமல் தப்பியோடுவது நாட்டுமக்களுக்கு நன்றாக தெரியும்.

ஊழல் புகார்களில் சிக்கியவர்களை பாஜக வாஷிங் மெஷினில் போட்டு, தூய்மையானவர்கள் என பட்டம் கொடுத்து பதவி கொடுத்து அழகு பார்க்கும் அமித்ஷாவிற்கு ஊழலை பற்றி பேச என்ன தகுதியிருக்கிறது?

பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்குத் திட்டமில்லை; சமஸ்கிருதத்துக்கு நிதியை அள்ளிக் கொடுத்து விட்டு தமிழ் மொழிக்கு நிதி ஒதுக்க மனமில்லை; தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் கீழடி உண்மையை ஏற்கத் திராணி இல்லை; தமிழ்நாட்டு மீனவர்களின் கைதைத் தடுக்க வக்கில்லை; இந்த இலட்சணத்தில் தமிழ்நாட்டில் வெற்றி பெறுவோம் எனப் பேசக் கொஞ்சமும் வெட்கமில்லையா அமித்ஷா அவர்களே!

தமிழ்நாடு இன்றைக்கு நாட்டிலேயே பொருளாதாரத்தில் முதலிடத்தில் இருக்கிறது என்கிற உண்மை உறுத்தியிருப்பதால் மக்களிடம் தோற்றுப் போன இந்தப் பொய்களை நம்பி அரசியல் செய்து கொண்டிருக்கிறார் அமித்ஷா. ஆயிரம் அமாவாசைகள் வந்தாலும் சரி பாஜகவின் நரித்தனம் தமிழ்நாட்டில் ஒருநாளும் வெற்றியடையாது! விடியல் ஆட்சியை அசைத்துக் கூடப் பார்க்க முடியாது! தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எதிராகப் பாஜகவையும் அதன் பண்ணையடிமையாக மாறிவிட்ட அதிமுகவையும் தமிழ்நாட்டு மக்கள் 2026 தேர்தலில் ஓட ஓட விரட்டக் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம் நேரு விளையாட்டு வளாகத்தில் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் ஆகிய விளையாட்டு மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா. எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.